விக்ரமபாகு கருணாரத்ன
செம்மை

(11/12/2011)

கடந்த பல வருடங்களாக எதிரணி ஒன்றின் தேவைப்பாடு பற்றி பலராலும் உணரப்பட்டடு வந்தது இது தொடர்பாக பல சுற்று பேச்சுவார்த்தைகளும் பல முறை நடைபெற்று வந்தன. இந்த விடயம் இலகுபோல் தெரிந்தாலும் மிகவும் கடினமான ஒரு பணியாகும். இது ஏன் ஏற்படுகின்றது? எந்த அடிப்படையில் எதிரணி ஒன்றை அமைப்பது என்பதிலேயே பிரச்சினைகள் தோன்றுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள இடதுசாரி சக்திகள், சமூக ஜனநாயக திட்டத்தின் அடிப்படையில் கட்சியின் பணிகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இன்று அரசாங்கம் திறந்த பொருளாதார கொள்கைகளை தீவிரமாக முன்னெடுத்து வருவதால் அதற்கு மாற்றீடான பொருளாதாரக் கொள்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் வாதமாக உள்ளது. மேலும் இவர்கள் உலகரீதியாக இன்று நவ தாராளவாத பொருளாதாரக் கொள்கை தோல்வியை தழுவி இருப்பதாலும் மக்கள் இந்த கொள்கைகளை எதிர்த்து வருவதாலும் ஐக்கிய தேசியக் கட்சி மாற்று பொருளாதாரக் கொள்கையில் பயணிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர். இந்த பயணத்தில் முதலாளித்துவ பிரிவினரும் தொழிலாளர்களும், சேர்ந்து பயணிக்க வேண்டும் என்றும் இவர்கள் கூறுகின்றனனர். உண்மையில் இது புதிய விடயமல்ல கார்ல்மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் செயற்பட்ட இடதுசாரி பிரமுகர்களான பேண்ஸ்ரெயின் போன்றோர் இது போன்ற சீர்திருத்த கொள்கைகளை முன்வைத்தனர். அக்காலத்தில் வாழ்ந்த புரட்சிகர சக்திகள் இந்தப் போக்கை எதிர்த்தே வந்தனர். ஆனால் கடந்த காலங்களில் ஐரோப்பிய முதலாளித்துவ சக்திகள் மேற்படி கொள்கையை பின்பற்றியே வந்தனர் ஆனாலும் அந்தப் பயணத்தில் அவர்கள் வெற்றிபெற முடியவில்லை இவர்களின் இந்த போக்கிற்கு மாற்றீடாக நவதாராளவாத கொள்கைகள் முன்வைக்கப்பட்டு வெற்றியும் அடையப்பட்டது.

எனவே எம் முன்னே உள்ள என்ன கொள்கையை பின்பற்ற வேண்டும் என்ற பிரச்சினையில் புதிதாக ஒன்றும் பின்பற்றப் படவேண்டிய தேவை எழவில்லை ஏற்கனவே இருந்து வந்த சமூக ஜனநாயக முறமையை முன் எடுக்க வேண்டும் என்பதே எல்லோரினதும் எண்ணமாக உள்ளது. அதன் அடிப்படையில் அரசாங்கம் பொருளாதாரத்தில் கட்டுப்பாடுகளை எவைத்திருக்க வேண்டும், திட்டமிட்ட பொருளாதார முறைகளை பின்பற்றப்பட வேண்டும் என்பவையே இதற்குள் உள்ளடக்கியுள்ளன இன்றைய நவதாராளவாத பொருளாதார முறைமையின் கீழ் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீடும் திட்டமிட்ட பொருளாதார முறைமையும் நவதாராளவாதிகளால் வெறுக்கப்பட்ட முறைமைகளாக காணப்பட்டன. ஆனாலும் நவதாராளவாத பொருளாதார முறைமையின் விளைவாக ஏற்பட்ட வளப்பிரச்சினைகள் சுற்றுப்புறச் சூழல் அழிவுகள், உணவு பற்றாக்குறை என்பவற்றிற்கு நவதாராளவாத பொருளாதாரத்திட்டம் விடை இல்லாத நிலையே உள்ளது. எனவே இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒருநாடு என்ற வட்டத்துக்குள் இல்லாமல் உலகம் தழுவியரீதியில் திட்டம் தேவை என்ற நிலை எல்லோராலும் ஏற்கப்பட்டுள்ளது. சந்தைகளை தானாக இயங்க அனுமதிப்பதன் மூலம் இந்தப்பிரச்சினைகளை தீர்த்துவிடலாம் என யாரும் கூற முன் வரமாட்டார்கள்.

ஒபாமா அதிகாரத்திற்கு வந்த போது பலவேறு சக்திகளை ஒன்று திரட்டி அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுத்தார். இதனூடாக முதலாளித்துவ முறைமையை காப்பாற்ற முயன்றதுடன், ஜனநாயக மக்களி இயக்கத்தின் ஊடாக தமது அதிகாரங்களை நிலைநிறுத்த முடியும் என்றும் ஒபாமா நம்பினார். அரேபிய உலகில் எழுந்த எழுச்சிகளில் ஒபாமாவின் எண்ணங்கள் ஒழிந்திருக்கின்றன. எனவே அரேபிய எழுச்சிக்குள் அமெரிக்காவின் கைகள் ஒழிந்தே இருந்தன.

இன்று தாராளவாத கருத்துக்களை பின் பற்றிவந்த ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்கள் கூட சமூக ஜனநாயக இயக்கத்தின் தேவையை வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். இன்று இந்த நாட்டில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் இரண்டு மார்க்கங்களில் பயணிக்கத் தொடங்கியுள்ளன. ஒரு பிரிவினர் சமூக ஜனநாயக போக்கில் அரசை எதிர்த்து வருகின்றனர். மறு பிரிவினர் பேரினவாத யுத்த வெறி கொண்ட மனோபாவத்துடன் அரசை எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். இரண்டாவது அணியினர் தமிழ் மக்களுக்கு அதிகார கையளிப்பு ஏதும் நடந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக உள்ளனர். அங்கனம் நடைபெற்றால் கிளர்ச்சிகளுக்கும் அவர்கள் தயாராகவே உள்ளனர். இதற்கான திட்டங்களிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். பேரினவாத போர் வெறி கொண்ட மாற்றீடு ஒன்றை இந்த அரசுக்கு எதிரான மாற்றீடாக இவர்கள் கருதுகின்றனர். எனவே எமது நாடு பயங்கரமான ஒரு காலகட்டத்தில் பயணிக்கிறது. ஏற்கனவே பேரினவாத சக்திகள் வலுவான நிலையில் இருக்கும் அரசாங்கத்திற்கு மாற்றீடாக அதைவிட வலுவான பேரினவாதம் கொலு ஏற்றத் துடிக்கின்றது. மேலும் ஆட்சியில் பலமான நிலையில் இருக்கும் பேரினவாத சக்திகள் தேசிய இனங்கள் ஒன்றிணைந்த ஒரு தேசிய எதிர்ப்பு இயக்கத்தை வளரவிடாமல் செய்வதற்கு அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டும் வருகின்றன.

எனவே ரணில் விக்ரமசிங்காவிற்கு இன்று ஒரு மக்கள் இயக்கத்திற்கு தலைமைதாங்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது பேரினவாதப் பக்கம் ரணில் சரணடையாமல் அவர்களுக்கு எதிரான மக்கள் இயக்கம் ஒன்றுக்கு தலைமைதாங்கும் நிலையில் அவர் காணப்படுகின்றார். ஆனாலும் ரணில் விக்ரமசிங்கா தன்னை சமூக ஜனநாயக சக்தியின் பிரதிநிதியாகவோ கட்சியின் தீவிர பிரிவினர் பிரதிநிதியாகவோ தன்னை இன்றுவரை அடையாளப் படுத்தவில்லை மேலும் ரணில் விக்ரமசிங்க மக்கள் இயக்கம் ஒன்றை கட்டி எழுப்பக் கூடியவரா? என்பதில் நிறையவே விமர்சனங்களும் உள்ளன. மக்கள் இயக்கம் என்பது தொடர்ச்சியாக பயணிக்க வேண்டிய ஒரு இயக்கமாகும் ஒரு வாகனத்தை வலிந்து தள்ளி ஓடவைத்துவிட்டு பின்னர் அதனை ஓடவிடாமல் ஒரு ஓரத்தில் நிறுத்திவிட்டு காலம் கழிந்து மீண்டும் ஓடவைக்க முயற்சிப்பதைப் போன்றே மக்கள் இயக்கத்தை இடைநடுவில் கைவிடுவதாகும்

எனவே இந்த நாட்டில் பலமான மக்கள் இயக்கம் ஒன்று வேறாக கட்டி எழுப்பப்படுவதன் மூலமே அதன் இலக்கை எட்டமுடியும். வெற்றி என்பது இலகுவாக கிட்டுவது இல்லை நீண்டகால தொடர்ச்சியான அர்ப்பணிப்பு நிறைந்த கடின உழைப்பின் ஊடாக எட்டப்படுவதே வெற்றியாகும் அந்த இலக்கை நோக்கிய பயணத்துக்குகே நாம் தயாராகவேண்டும்.